நற்பணியே நம் வாழ்வு!
MADURAI SEED

மதுரை சீடு இளைஞர்கள் வழங்கும்

# புதிய வெளிச்சங்கள்

தனிச்சுற்று இதழ்

"வெளிச்சத்தின் வேராய் விளங்குவோம்
புது உலகின் மாதிரியாய் திகழ்வோம்"

ஏப்ரல் 2010 - ஜூலை 2010 | உலகு - 3 | வெளிச்சம் - 7

## முன்னேறுவோம், முன்னேற்றுவோம்

நெருக்கடியான வீடுகள், எப்போதும் வீடுகளில் நிறைந்திருக்கும் தொலைக்காட்சி சீரியல்களின் சத்தம், வருடத்திற்கு அதிகப்படியான திருவிழாக்கள், மாதத்திற்கு மூன்று முறையாவது திருமண விழா ஒலிப்பெருக்கிகளின் சத்தம், இவை கரும்பாலையில் மட்டுமல்ல எங்கும் தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டன. இவற்றையும் தாண்டி கடந்த 11 ஆண்டுகளாக சப்தமில்லா புரட்சி ஒன்று நடக்குது. ஆம் மதுரை சீடு நடத்தும் கல்விப் புரட்சி நடக்குது. கரும்பாலையை தலைமையாக கொண்டு நடக்குது.

கலவரம், பதற்றம், பிரச்சனைகள், குற்றங்கள், பட்டா இல்லை, வங்கிகளில் லோன் கிடையாது என இவையனைத்தும் நம் கரும்பாலைப் பகுதியின் அடையாளங்களாக உள்ளன.

அமெரிக்கன் கல்லூரி N.S.S., Dr.தாஜ், Dr.ஆடம்ஸ், மதுரை சீடு கார்த்திக்பாரதி, இவர்களின் நற்பணிகளாலும்,கரும்பாலை பெற்றோர்களின் மனவெழுச்சியாலும் கரும்பாலையின் அடையாளங்கள் சிறிது,சிறிதாக மாறிவருகின்றன.

*கல்வியில்லா பூமி*
*களர் நிலம்*
*அங்கு களைகள் எனும்*
*புதல்வர்கள் தோன்றுவார்கள்*
*பயிர்கள் என்னும்*
*மானுடர்கள் தோன்ற மாட்டார்கள்*

மானுடர்களை உருவாக்கும் பணிகளை கரும்பாலைப் பெற்றோரும், இளைஞர்களும், குழந்தைகளும் செய்யத் துவங்கி விட்டனர்.

மதுரை சீடு, இந்திராநகர், P.T.காலனி, S.M.நகர், கரும்பாலை, தத்தனேரி, சம்பக்குடி பகுதிகளில் உள்ள எண்ணற்ற இளைஞர்களை, குழந்தைகளை கரை சேர்த்துள்ளது.

மதுரை சீடு பள்ளித் தேர்வுகளிலிருந்து இடைவிலகலான மாணவ, மாணவிகளை B.L., B.A., B.Sc., பட்டதாரிகளாக்கியுள்ளது. சமூக பணியாளர்கள், M.Phill பட்டதாரி, பொறியியல் வல்லுநர்கள், ஆசிரியர்கள்,50க்கும் மேற்பட்ட பட்டதாரிகள், மருந்தாளுநர்கள, டெக்னிஷியர்கள் என பலபேரை உருவாக்கி உள்ளது. பலர் அரசுத் துறை, ராணுவம், தனியார் துறை, காவல் துறை, வெளிநாடு என பல துறைகளில் பணி வாய்ப்பு பெற்று பணிபுரிகின்றனர். மதுரை சீடு மூலம் வளர்ந்தோர் பல்வேறு வெளியிடங்களில் உதவி பெற்று சுமார் 20 பேர் முனைவர் (டாக்டர்), முதுகலை, இளங்கலை படிப்புகளில் பயின்று வருகின்றனர்.

***தற்போது கரும்பாலை மதுரை சீடு கல்வி மையங்களில் உள்ள***
***27 இளைஞர்கள் கீழ்வரும் படிப்புகளை பயின்று வருகின்றனர்***

| | |
|---|---|
| *சுற்றுலாத்துறை* | *1* |
| *ஆசிரியர் படிப்பு* | *4* |
| *அரசுப் பணிகளுக்குத் தயாராவோர்* | *5* |
| *ஆங்கிலப் படிப்பு* | *6* |
| *தமிழ் படிப்பு* | *4* |
| *சமூகவியல் படிப்பு* | *2* |
| *இன்ஜினியரிங் படிப்பு* | *5* |

மேற்கண்டவர்களை தவிர குறிப்பிடத்தக்க அளவில் பலரும் பலவிதமான படிப்புகளை பயின்று வருகின்றனர்.

**கல்வி பெறுதல் ஒன்றே, சமூக விடுதலைக்கான அடிப்படை.!!**

**கல்வி அளித்தல்**

**இன்றைய முதலீடு,**

**நாளைய வம்சவிருத்தி.**

**"குழந்தைகள், இளைஞர்கள் படிக்க சூழலைக் கொடுங்கள்!**
**அவர்கள் உங்கள் சுற்றத்தைக் காப்பார்கள்!"**

செங்குந்தர் பள்ளி அரசு உதவி பெறும் சிறிய எளிய பள்ளி.

இப்பள்ளியில் இதுவரை அதிக மதிப்பெண் பெற்றவர்கள் யாவரும் கரும்பாலை சேர்ந்தவர்களே.

செங்குந்தர் பள்ளி மாணவர்கள்

| | | |
|---|---|---|
| K.சதீஸ்குமார் | 479 | தெற்குத்தெரு |
| P.சதீஸ்குமார் | 469 | தெற்குத்தெரு |
| K.L.N.சாரநாத் | 474 | தெற்குத்தெரு |
| G.உமா தேவி | 460 | கிழக்குத்தெரு |
| P.திலீபன் | 460 | கிழக்குத்தெரு |

பெண் குழந்தைகளில் **P.மகேஸ்வரி** மாநகராட்சிப் பள்ளியில் படித்து அதிக மதிப்பெண் எடுக்க முடியும். என நிரூபித்தவர் இவரின் பத்தாம் வகுப்பு மதிப்பெண் 475. இந்திய பண்பாட்டு பாடத்தில் மாநில அளவில் மூன்றாமிடம் பெற்றது. வடமாநிலங்களில் சென்று படித்தது. வட மாநிலங்களுக்கு சென்று வந்தது. தமிழக தலைநகரிலும், இந்தியத் தலைநகரிலும், கல்வியின் மூலம் சிறப்பிடம் பெற்று விமானங்களில் பயணிப்பது என கரும்பாலைப் பகுதி குழந்தைகளும், இளைஞர்களும் சாதனைகள் பல புரிந்து வருகிறார்கள்.

நமது பகுதி இளைஞர்கள் ஒரே நேரத்தில் மூவர் தமிழக அரசு தலைமை செயலகத்தில் பணிபுரிந்த காலமும் சமீபத்தில் நிகழ்ந்தது.

கரும்பாலை மாநகராட்சி பள்ளியின் முன்னாள் தலைமையாசிரியர் **K.முத்துராமலிங்கம் - பாப்பம்மாள்** அவர்களின் பேரன், கட்டிட காண்டிராக்டர் மீனாட்சி சுந்தரம் - முத்து மீனாள் அவர்களின் இரண்டாவது மகன் **M.முத்துப்பாண்டி,** 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் 1200க்கு 1130 மதிப்பெண் பெற்றுள்ளார். இவரின் பத்தாம் வகுப்பு மதிப்பெண் 500க்கு 474. இது யாரும் அடைந்திராத சாதனை. சென்னை அண்ணாப் பல்கலைக் கழகத்தில் இன்ஜினியரிங் படிப்பது எவ்வளவு பெருமை அடடா! நெஞ்சம் இனிக்கிறதல்லவா! நாம் பிறந்த மண், கரும்பாலையல்லவா! நாம் வாழும் மண் கரும்பாலையல்லவா! இவர்கள் பெயர்கள்என்றென்றும் காலப்பெட்டகத்தில் பொறிக்கப்பட்டிருக்கும். சாதனைகளும் சரித்திரங்களும் ஒரு புறமிருக்கட்டும். பொருளாதாரம், குடிபழக்கம், சினிமா, டிவி, காதல், இவற்றால் கவனசிதைவு, பாடச்சுமை, திறமையில்லாத ஆசிரியர்கள், சுவாரசியமில்லாத போதனை முறைகள், கடமைக்கு நடைபெறும் பள்ளிகள், இலவசங்களையும், அரசின் சலுகைகளையும் நம்பி படிக்க வைக்கும் பெற்றோர்கள் என தடைக்கற்கள் தினமொன்றாக புறப்பட்டு விடுகின்றன. படிப்பென்றாலே பயந்து ஓடும்

பிள்ளைகள். ஏராளம். ஒன்பதாம் வகுப்பில் பல பேரின் எதிர்காலத்தை ஒழித்து கட்டும் தேர்வு முடிவுகள். படித்துக் கொண்டிருக்கும் போதே திருமணம் என்ற பிரச்சனைகள் எல்லாம் மாற வேண்டும். நாம் மனது வைத்தால் நல்ல வழி பிறக்கும்.

அதிகம் பேர் எதிர்காலத்தில் கல்லூரி சென்று வீட்டுக்கு ஒரு பட்டதாரி. வீட்டுக்கு ஒரு வளமான துறையில் சம்பாதிப்பவர்களை உருவாக்குவது. கற்பதற்கான நல்ல சூழலை உருவாக்குவது. நல்ல கல்வி வாய்ப்புகளை தருவது.நம் பகுதி சார்ந்தவர்களை முன்னோடிகளாக்குவது. என்பவையாவும் மதுரை சீடு-இன் இலட்சியங்களாகும்

*கற்பது நம் வாழ்வுக்கு*

*நம் எதிர்காலத்திற்கு*

*கடவுளுக்குத் தரும் முக்கியத்துவத்தை, தரமான கல்விக்கும் தருவோம்!*

*நம் பெற்றோரை கல்விக்காக சேமிக்கப் பழக்கப்படுத்துவோம்!*

*ஆடை அணிகலன் அழகில்லை*

*ஆடம்பரப் பொருட்கள் அவசியமில்லை*

*அன்பையும், அம்மா, அப்பாவையும்*

*போற்றும் கல்வி அவசியம்.*

*படிக்க வாய்ப்புகள் தருவோம்.*

*கற்போம்! கரும்பாலையை முன்னேற்றுவோம்!*

இவண்

மதுரை சீடு இளைஞர்கள்

**நிறைவான கல்விப் பணிகளில் V.மாரியம்மாள், A.S.கார்த்திக்பாரதி, M.மன்சூர்அலி**

**மதுரை சீடு இளைஞர் பேரவை தலைவர்கள் 2010 - 2011**

**M.தங்கலெட்சுமி, K.அழகிரி**

புதிய வெளிச்சங்கள் பொறுப்பாளர் - C.கற்பகஜோதி

தொடர்புக்கு.

**MADURAI SEED YOUTH FEDERATION (MSYF)**
**MADURAI SEED**
**Arjun Shanmuga Illam, 439/1 East Street,**
**Karumbalai, Madurai - 625 020. Ph : 0452 - 2537670, 98948 05446**
**E-mail : maduraiseed1999@gmail.com Web : madurai-seed.org**